

ஈரோடு மாநகராட்சி மண்டலம்3 வார்டு எண் 50 முத்தம்பாளையம் பகுதி 2 ஷஸ்டெம் பார்க் அணைக்கட்டு அருகில் வார்டு சிறப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். நிகழ்வில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மண்டல குழு தலைவர் சசிகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி, கரூரில் தமிழ்நாடு ஸ்பீடு ஸ்கேட்டிங் அசோசியேஷன் நடத்திய, 15வது தமிழ்நாடு ஸ்பீடு ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டிகளை துவக்கி வைத்தார்.

# கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், அக். 29 - கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயற்குழுக் கூட்டம் (சி.வெ.கணேசன்) எனது தலைமையில், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர், தாட்கோத் தலைவர் தா.இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நாளை (30.10.2025 - வியாழக்கிழமை) மாலை 4.30 மணியளவில், நெய்வேலி, தொ.மு.ச. அலுவலகத்தில் மாவட்ட இளைஞர் அணி செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.

# மன்னார்குடி அருகே மின்னல் தாக்கி எரிந்த குடிசை!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நிவாரணம் வழங்கி ஆறுதல்!

திருவாரூர், அக். 29 - மன்னார்குடி அருகே பட்டுக்கோட்டை சாலையில் உள்ள பரவாகக்கோட்டை பகுதியில் மின்னல் தாக்கியதால் சேதமடைந்த குடிசை வீட்டின் உரிமையாளர்களுக்கு அமைச்சர் டி. ஆர். பி. ராஜா ஆறுதல் கூறியதுடன் நிவாரண உதவிகளையும் வழங்கினார்,

பரவாக்கோட்டை கிராமத்தின் நடுத்தெரு பகுதியில் வசித்துவந்த முத்தழகு என்பவரது வீட்டில் கணமழையின் காரணமாக ஏற்பட்ட மின்னலால் தீ பிடித்ததோடு வீடும் சேதமடைந்தது. உடனடியாக முத்தழகு மனைவி சுகன்யா உள்ளிட்ட மூன்று குழந்தைகளும்வீட்டை விட்டு வெளியேறியதால் நல்வாய்ப்பாக காயங்கள் இன்றி தப்பினர்

ஆனால் மின்னல் காரணமாக அவரது குடிசை முழுவதும்தீக்கிரையானது. இதன் விபரம் அறிந்த தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களது வீட்டிற்கு சென்று முத்தழகு சுகன்யாகுடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி ,உடனடி நிவாரண உதவிகளை வழங்கினார்.

அப்போது மன்னார்குடி ஒன்றிய செயலாளர் டி. எஸ்.டி.முத்துவேல், பறவைகிரி, பாலகுமார், கதிரவன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் !

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., அறிவிப்பு



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நாளை 30.10.2025 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ.எஸ். தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி.கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர், சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில, மாவட்ட, நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** SIR சிறப்பு தீவிர திருத்தம் சம்மந்தமாக,

கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா,** கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர்** எம்.எல்.ஏ.

செயலாளர் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதக்கரம்” 251 வது நாள்!

## அம்பத்தூர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, அக். 29 - சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுத கரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 251 வது நாள் அம்பத்தூர் வடக்கு பகுதிளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி உணவு வழங்கப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 251 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (28.10.2025), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 85, அம்பேத்கர் தெரு, ஆசிரியர் காலனி, விநாயகர் கோயில் அருகில், 2) வட்டம் 86, மண்ணூர் பேட்டை, ஐயப்பன் கோயில், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி. கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர். ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. வட்டச் செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு. விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி

### அக்டோபர் 29 (1995)



திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும் – நகர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர்.

திருச்சி வெங்காயமண்டி பாரம் சுமக்கும் தொ.மு.ச. தலைவராகவும் – அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

ஆங்கிலத்தில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.

கொள்கை உறுதியும் – அடக்குமுறைகளைத் தாங்கும் நெஞ்சுரமும் கொண்டு திருச்சியில் கழகத்தை வளர்த்த இனிய உடன்பிறப்பு என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக விழும் மரங்களை அகற்ற

# 457 மர அறுவை இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன!

## பெருநகர சென்னை மாநகராட்சி தகவல்!

சென்னை, அக். 29 - வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை கத்தரித்து அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .

கடந்த 17.10.2025 அன்று காலை 8.30 மணி முதல் நேற்று (28.10.2025) காலை 8.30 மணி வரை சராசரியாக 267.80 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. மேலும், 28.10.2025 காலை 8.30 மணி முதல் காலை 11 மணி வரை சராசரியாக 5.89 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.அதிகபட்சமாக மேடவாக்கம் சந்திப்பில் 11.40 மி.மீ. மழைப்பொழிவும் (பெருங்குடி மண்டலம்), குறைந்தபட்சமாக முகலிவாக்கம் பகுதியில் 0.60 மி.மீ (ஆலந்தூர் மண்டலம்) பெய்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 15 மண்டலங்களில் 01.07.2025 முதல் இதுவரை மொத்தம் 66,117 மரங்களின் கிளைகள் கத்தரித்து அகற்றப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்காக 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 ஹைட்ராலிக் ஏணிகள், 224 கையடக்க மர அறுவை இயந்திரங்கள், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

மேலும், தற்போது தொடங்கியுள்ள வடகிழக்குப் பருவமழையின் காரணமாக விழுந்த மரங்கள் மற்றும் மரங்களின் கிளைகளை அகற்றும் பணிகளும் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டது. 17.10.2025 அன்று முதல் தொடங்கிய வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 27.10.2025 வரை 55 மரங்கள் மற்றும் மரக்கிளைகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இன்று (28.10.2025) மழையின் காரணமாக விழுந்துள்ள 4 மரங்கள் மற்றும் மரக்கிளைகள் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், வடகிழக்குப் பருவமழையின் காரணமாக விழும் மரங்களை உடனுக்குடன் அகற்றுவதற்காக மண்டலத்திற்கு தலா 12 பணியாளர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், மரக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா ஒரு டாடா ஏஸ் வாகனம் என 15 வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடுவூர் இரா.சாமிநாதன்

### அக்டோபர் 29 (2013)



அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றிய போது,கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஆசிரியப் பணியை துறந்து கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வடுவூர் கிளைச் செயலாளர், நீடாமங்கலம் ஒன்றிய அவைத்தலைவர் – செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மன்னார்குடி நிலவள வங்கித் தலைவராக பதவி வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.